மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம், நேரம் ஆகிறது, பேசி முடியுங்கள்.

திரு. கோவை தங்கம்: நஷ்ட ஈடாக மத்திய சர்க்கார் ரூ.75,000 கொடுக்கிறார்கள், மாநில சர்க்கார் ரூ.25,000 கொடுக்கிறார்கள், ஆக, ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்கள்தான் முதன்முதலில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வால்பாறையில் சிறுத்தை அடித்ததால் இறந்த குழந்தைக்கு ஒரு இலட்சம் ரூபாய் கூடுதலாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மத்திய சர்க்கார் ரூ.3 இலட்சமும், மாநில சர்க்கார் ரூ.3 இலட்சமும், ஆக 6 இலட்சம் ரூபாயை பாதிக்கப்படும் குடும்பத்திற்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதிகள் 30 (3) மற்றும் 185 (2)-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவை விதிகள் 30 (3) மற்றும் 185 (2) ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மொழியலாம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவை விதிகள் 30 (3) மற்றும் 185 (2) ஆகியவற்றை இன்று (13–5–2010) தளர்த்தி நிதி அலுவல்களுக்கிடையில் அரசினர் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

அரசினர் தீர்மானங்களை இப்போது எடுத்துக்கொள்கிறேன்.